IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF ARAKKONAM

OS. 92/2014

Deposition of Witness : PW 3

Name : சம்பந்த மூர்த்தி

Father's Name /W/o : த/பெ. சோனாச்சலம்

Religion : இந்து

Caste : –

Calling : –

Address : அரக்கோணம்

Solemnly affirmation accordance with the provision of Act X 1873 on the day of 09.01.2025

**முதல் விசாரணை வாதி தரப்பில்**

1. நான் அரக்கோணத்தில் வசித்து வருகிறேன். எனக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்ததா என்றால் வந்தது. நான் பத்திர எழுத்தராக உள்ளேன் என்றால் ஆமாம். எனது ஆவண எழுத்தர் உரிமம் உள்ளதா என்றால் 2024 டிசம்பர் மாதத்துடன் உரிமம் முடிந்துவிட்டது என்பதால் புதுப்பிப்பதற்காக ராணிப்பேட்டை மாவட்ட பதிவாளர் அலுவலகத்திற்கு அனுப்பி உள்ளேன்.

2. வா.சா.ஆ.9 ஆவணம் என்ன ஆவணம் என்றால் பொது அதிகார ஆவணம். எந்த தேதி எழுதப்பட்டுள்ளது என்றால் 28.07.1998 ஆம் தேதி எழுதப்பட்டுள்ளது. மேற்படி ஆவணத்தை யார், யாருக்கு எழுதிக்கொடுத்தார் என்றால் பலராமன் என்பவர் தீனதயாளன் என்பவருக்கு எழுதிக்கொடுத்துள்ளார்.

3. வா.சா.ஆ.9 ஆவணத்தை நான் தான் தயார் செய்தேன் என்றால் சரிதான். மேற்படி ஆவணம் அரக்கோணம் இணை சார் பதிவாளர் அலுவலகம் 1 யில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். யார் சாட்சி கையொப்பம் செய்தார் என்றால் அம்மனூர் சேர்ந்த பலராமன், ஆத்தூர் சேர்ந்த பாரதி சாட்சி கையொப்பம் செய்துள்ளார்கள்.

4. ஆவணத்தை எழுதிக்கொடுத்த பலராமன் சாட்சிகள் கையொப்பம் போடுவதற்கு முன்பு என்முன்னிலையில் கைரேகை வைத்தார் என்றால் சரிதான்.

**1 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1 முதல் 7 பிரதிவாதிகள் யாரும் ஆஜாராகததால் குறுக்கு விசாரணை வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.